பால் வடியும் முகம் நினைந்து நினைந்தென் உள்ளம்
பரவசம் மிகவாகுதே கண்ணா

நீலக்கடல் போலும் நிறத்தழகா - எந்தன்
நெஞ்சம் குடி கொண்ட அன்று முதல் இன்றும்
எந்த பொருள் கண்டும் சிந்தனை செலாதொழிய

வான முகட்டில் சற்று மனம் வந்து நோக்கினும்
மோன முகம் வந்து தோணுதே - தெளி
வான தெண்ணீர் தடத்தில் சிந்தனை மாறினும்
சிரித்த முகம் வந்து காணுதே - சற்று
கானக்குயில் குரலில் கருத்தமைந்திடினும் - அங்குமுன்
கானக்குழலோசை மயக்குதே

கருத்த குழலொடு நிறத்த மயில் சிற
கிறுக்கி அமைத்த திறத்திலே
கான மயிலாடும் மோன குயில் பாடும்
நீல நதியோடும் வனத்திலே

குழல் முதல் எழிலசை குழைய வருமிசையின்
குழலொடு மிளிரின கரத்திலே
கதிரும் மதியுமென நயன விழிகளிரு
நளினமான சலனத்திலே

காளிங்க சிரத்திலே - கதித்த பதத்திலே

என் மனத்தை இருத்தி
கனவி நனவினொடு பிறவி பிறவி தொறும்
கனிந்துருக வரம்தருக பரம்கருணை